திருப்பூர் மாவட்டம், பல்லடம் மற்றும் திருப்பூர் தெற்கு வட்டத்திற்குட்பட்ட உகாயனூர், இச்சிப்பட்டி மற்றும் வடுகபாளையம் பகுதிகளைச் சார்ந்த 145 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் வருவாய்த் துறையின் சார்பில் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டாக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.மனிஷ் நாரணவரே தலைமையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் க.கார்த்திகேயன், சிவபிரகாஷ், சரவணன், ராஜேஷ், ஜேசிபி எஸ். பாலுச்சாமி, கா.சிவக்குமார், வடுகபாளையம் சிவக்குமார் உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் அமைந்துள்ள உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவின் 469வது கந்தூரி திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு பார்க்கிங் வசதி மற்றும் நாகூர் சில்லடி தர்கா கடற்கரையில் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெறுவதை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேரில் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் முன்னேற்பாடு பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், வை.செல்வராஜ்எம்பி, மாவட்ட செயலாளர் என். கௌதமன், ஜெ.முகம்மது ஷா நவாஸ் எம்.எல்.ஏ, நகரமன்ற தலைவர் இரா.மாரிமுத்து ஆகியோர் உள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் அமைந்துள்ள புகழ்பெற்ற தர்காவின்

469 வது கந்தூரி சந்தனக்கூடு திருவிழா - முன்னேற்பாட்டுப் பணிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் -அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு!

நாகப்பட்டினம், நவ.11

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் அமைந்துள்ள உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவின் 469வது கந்தூரி சந்தனக்கூடு திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி எஸ்.எம்.நாசர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு மேற்கொண்டனர்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர்கள் தெரிவித்த தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் அமைந்துள்ள உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவின் 469வது கந்தூரி திருவிழாவானது எதிர்வரும் 21.11.2025 முதல் 30.11.2025 வரை சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற நோக்கில் இத்திருவிழாவின் முக்கிய விழாவான சந்தனக்கூடு ஊர்வலம் 30.11.2025 அன்று இரவு நடைபெற உள்ளதை முன்னிட்டு துறைகள் வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் வருவாய்த்துறையினர் ஊர்வலம் செல்லும் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் மற்றும் ஊர்வலம் சிறப்பாக நடைபெறவும், நகராட்சி மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் நாகப்பட்டினம் முதல் நாகூர் அருகில் உள்ள குப்பைகளை அகற்றி, ப்ளீச்சிங் பவுடர் தினமும் தெளிக்க சுழற்சி முறையில் சுமார் 100 தூய்மைப்பணி யாளர்கள், குப்பைகளை அகற்ற 4 டிராக்டர்கள் பழுதடைந்த தெரு விளக்குகள், சாலைகளை சரி செய்திடவும் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக ஆங்காங்கே 30 தற்காலிக கழிவறைகள் அமைத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பக்தர்கள் அதிகம் கூடும். 10 இடங்களில் குடிநீர் தொட்டி வசதி மற்றும் குளோரிசன் செய்யப்பட்ட சுத்தமான குடிநீரை வழங்கிட நடவடிக்கை, வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக 03 பார்க்கிங் வசதி ஏற்பாடு, ஊர்வலம் வர ஏதுவாக நாகப்பட்டினம் முதல் நாகூர் வரை சாலையில் உள்ள வேகத்தடைகளை அகற்றி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காவல்துறையினர் சார்பில் நாகூர் கந்தூரி விழாவின் போது நாகப்பட்டினம் முதல் நாகூர் வரை உள்ள பகுதிகளிலும் மற்றும் தர்காவை சுற்றியுள்ள பகுதிகளிலும் உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் தலைமையில் 3 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 15 துணைக்காவல் கண்காணிப்பாளர்கள். 45 காவல் ஆய்வாளர்கள், 119 உதவி காவல் ஆய்வாளர்கள் மற்றும் 987 காவலர்கள் உள்பட சுமார் 1100 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 10 உயர் கண்காணிப்பு கோபுரங்கள் (Watch Tower). வான் வழி கேமராக்கள் (Drone Camera). 80க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமிராக்கள் மற்றும் 24 மணி நேரமும் செயல்படும் காவல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், சாலை விபத்துக்களை தடுப்பதற்கு 03 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் ரோந்து பணியில் ஈடுபடுத்தபட உள்ளது. நாகூர் தர்காவிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு உதவியாக காவல் உதவி மையமும், திருட்டு, செயின் பறிப்பு உள்ளிட்ட குற்ற சம்பவங்கள் ஏதும் நடைபெறா வண்ணம் தடுக்க 01 ஆய்வாளர் தலைமையில் 25 குற்ற தடுப்புப்பிரிவு காவலர்கள் மற்றும் வெடி குண்டு கண்டறிதல் மற்றும் செயலிழப்பு குழுவினர் (BDDS) பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். சுந்தூரி திருவிழாவினை முன்னிட்டு, கொடி ஊர்வலம் நடைபெறும் நாளான 21.11.2025 மதியம் முதல் 22.11.2025 அதிகாலை வரை மற்றும் சந்தனக்கூடு ஊர்வலம் நடைபெறும் நாளான 30.11.2025 இரவு முதல் 01.12.2025 அதிகாலை வரை வாகனங்கள் ECR புத்தூர் சாலை மார்க்கமாக செல்ல போக்குவரத்து மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஊர்வலம் செல்லும் இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும். வாகனம் நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை தவிர வேறு இடத்தில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை அப்புறப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் சந்தனக்கூடு அன்று ஊர்வலம் செல்லும் நாளில் மின் ஒயர்களால் பாதிப்பு ஏற்படாதவாறு தொய்வான நிலையில் உள்ள மின் ஒயறுகளை முன்கூட்டியே சரி செய்திட வேண்டும். நெடுஞ்சாலைத்துறையினர் கனிவான கவனத்திற்கு நாகப்பட்டினம் காரைக்கால்இசிஆர் சாலை மற்றும் ஈசிஆர் நாகூர் தர்காவிற்கு செல்லும் சாலையிலும் வேகத்தடை அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். பிஎஸ்என்எல் சார்பில் தடையில்லா தகவல் தொடர்பினை உறுதி செய்திட வேண்டும். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தேவைக்கேற்ப ஆம்புலன்ஸ் வாகனங்களை முக்கிய இடங்களில் நிறுத்தி வைக்கவும், 6 மருத்துவ முகாம்கள் மற்றும் 07 நகரும் மருத்துவ வாகனம் அமைத்து இலவச மாத்திரைகள விநியோகத்திடவும், மெர்ஜென்சிக்கான அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்பு துறை சார்பில் சாலைகளில் சுற்றி தெரியும் தெரு நாய்கள் மற்றும் கால்நடைகளை அப்புறப்படுத்திடவும், தீயணைப்பு துறை சார்பில் தர்கா குளம் மற்றும் நாகூர் கடற்கரையில் அசம்பாவிதங்கள் நடைபெறா வண்ணம் 68 தியணைப்பு துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர். மேலும் பைபர் படகுகளை தயார் நிலையில் வைத்து, விபத்து சமயத்தில் உதவ நீச்சல் வீரர்கள் மற்றும் தன்னார்வலர்களை தயார் நிலையில் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலர் சார்பில் விழா காலங்களில் நாகூர் இரயில் நிலையத்திலிருந்து தர்காவிற்கு வரும் பக்தர்களுக்கு ஆட்டோ ஓட்டுநர்கள் அதிக கட்டணம் வசூள் செய்வதை கண்காணித்து அதிக கட்டண தொகை வசூல் செய்தால் உடனே அவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். முன் கூட்டியே ஆட்டோ ஓட்டுநர்களை அழைத்து ஆய்வு கூட்டம் நடத்திட வேண்டும். பொதுப்பணித்துறை சார்பில் தர்கா குளத்தில் நான்கு முனைகளிலும் உயர் கோபுர விளக்குகள் பொருத்தவும், குளத்தை சுற்றி மூன்று நடைபாதைகளிலும் குப்பை தொட்டிகள் வைக்க வேண்டும் போக்குவரத்து துறையினர் சார்பில் கந்தூரி விழாவினை முன்னிட்டு கூடுதலாக 45 சிறப்பு பேருந்துகளை இயக்கப்படுவதை உறுதி செய்து, கந்தூரி விழாவிற்கு வெளி மாநிலத்திலிருந்து பக்தர்கள் வருகை புரிவதற்கு முக்கிய வழித்தடங்களில் இயக்கப்படும் பேருந்துகளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஸ்டிக்கர் ஒட்டிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சு.செல்வகுமார், நாகப்பட்டினம் நகரமன்ற தலைவர் இரா.மாரிமுத்து, நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் தரா.சங்கர நாராயணன், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் டி.லீனாசைமன், நாகப்பட்டினம் நகரமன்ற துணைத்தலைவர் செந்தில்குமார், நாகூர் தர்கா தலைமை நிருவாக அறங்காவலர் சையது முகமது காஜி ஹுசைன் சாஹிப், நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் சையது முகமது கலீபா சாஹிப், மாநில சிறு பான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் ஏ.எச். நஜிமுதீன் ஆகியோர் உடனிருந்தனர்.

எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக – மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்

கரூரில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், நவ.11.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கரூரில் இன்று தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. தி.மு.கழகம் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்ளுமாறு கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நாட்டின் பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் SIRக்கு தொடக்கம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில், திமுக உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) கொண்டு வந்துள்ளது. சிறுபான்மை யினர் வாக்குகள், பாஜகவின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறிவைத்து நீக்கும் நோக்கத்துடன் தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களை சேர்க்கும் சதித்திட்டத்தோடு ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி, முறையான திட்டம் இன்றி அவசரகதியில் SIRஐ கொண்டு வந்து தேர்தல் ஆணையம் இதைச் செய்திட முயல்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது.

மேலும் பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல், தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் SIR திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழிதோண்டி புதைப்பதாகவும் உள்ளது.

தமிழ்நாட்டில் கனமழை மற்றும் வானிலை எதிர்பார்க்கப்படும் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், தமிழ்நாடு வாக்காளர்களில் பெரும்பாலானோர் கிராம ப்புற மக்களாகவும் விவசாயிகளாகவும் இருக்கும் நிலையில், தேர்தல் ஆணையம் வழங்கும் Enumeration Form எனும் கணக்கீட்டுப் படிவங்களை பெற்று, திருப்பி அளிக்க போதிய கால அவகாசம் கிடைக்காது. மேலும் அந்தப் கணக்கீட்டுப் படிவங்களில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை எப்படி நிரப்புவது என்பது குறித்து மக்களிடையே பெரும் குழ ப்பங்கள் நிலவுகிறது.

இந்த செயல்முறையில் பெரும் எண்ணிக்கையில் தகுதியுள்ள வாக்காளர்கள் நீக்கப்படுகின்ற அபாயம் உள்ளது. மேலும் இந்தக்காலம் Enumerationக்கு உகந்த காலம் இல்லை என்று திமுக உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் தெரிவித்துள்ளன.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகள் எதிர்பார்த்தவாறே 04.11.2025ஆம் தேதியில் இருந்து இன்று வரை SIR பெரும்பாலான தகுதியுள்ள வாக்காளர்கள் நீக்கப்படும் அச்சத்தை உறுதிப்படுத்துகிறது. பொரும்பாலான இடங்களில் BLOக்கள் கணக்கீட்டுப் படிவங்களை (Enumeration Form) வழங்குவதில் தாமதம் நிலவுகிறது. BLOக்களும், BLAக்களும் பல இடங்களில் இன்னும் சரியான தகவல் தொடர்புகளால் ஒருங்கிணைக்கப்பட வில்லை. மேலும் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002/2005 வாக்காளர் பட்டியல்கள் முழுமை யற்றதாகவும், குழப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன.

எனவே SIR சீராய்வைக் கைவிடும்படி தேர்தல் ஆணையத்திற்கு வேண்டுகோள் விடுத்தும், கண்டு கொள்ளாமல் ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி அவசர கதியில் எதேச்சாதிகாரப் போக்கில் இந்திய தேர்தல் ஆணையம் தமிழ் நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) கொண்டு வந்துள்ளதைக் கண்டித்து 11ம்தேதி (இன்று) கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கரூர் தலைமை தபால் நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. எனது தலைமையில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளிட்ட அமைப்பு பிரதிநிதிகள், கழக முன்னோடி கள், அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகளும், பொதுமக்களும், திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன் என கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் –

கணக்கீட்டுப் படிவத்தை இணையதளம் மூலம் (online) நிரப்புவதற்கான வசதி!

தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு!

சென்னை, நவ.11- வாக்காளர்கள் வசதிக்காக இந்தியத் தேர்தல் ஆணையம் தனது அதிகாரப்பூர்வ இணையதளமான https://voters.eci.gov.in இல் கணக்கீட்டு படிவத்தை (Enumeration Form) இணையதளம் மூலம் (online) நிரப்புவதற்கான வசதியை ஏற்படுத்தியுள்ளது.

வாக்காளர்கள் தங்களது பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் அல்லது வாக்காளர் அடையாள அட்டை எண்ணினை பயன்படுத்தி இணையதளம் மூலம் (online) உள்நுழைய பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு வரும் ஒரு முறை கடவுச்சொல்லை (OTP) உள்ளிட வேண்டும். உள்நுழைந்த பின்னர் அந்த இணைய பக்கத்தில் காட்டப்படும் "Fill Enumeration Form" என்ற இணைப்பினை தேர்வு செய்யலாம்.

இந்த வசதியினை வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர் ஆதார் அட்டையில் உள்ள பெயருடன் பொருந்தும் வாக்காளர்கள் மட்டுமே பயன்படுத்த இயலும்.

வெற்றிகரமாக உள்நுழைந்த பிறகு, வாக்காளர் இணையப் பக்கத்தில் கோரப்படும் தேவையான விவரங்களை நிரப்ப வேண்டும். சரியான விவரங்களைச் சமர்ப்பித்த பிறகு இணைய பக்கமானது esign பக்கத்திற்கு மாறும். அதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணுக்கு ஒரு முறை கடவுச்சொல் (OTP) அனுப்பப்படும். அந்த ஒரு முறை கடவுச்சொல்லை (OTP) உள்ளிட்டவுடன், படிவம் வெற்றிகரமாக பதிவேற்றப்படும்.

தங்களது கைபேசி எண்களை பதிவு செய்திருக்கும், மேலும் வாக்காளர் பட்டியல் மற்றும் ஆதார் பதிவுகளில் பெயர் பொருந்தி உள்ள வாக்காளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் அரசு செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வி.எம். தேவராஜ்

நவம்பர் 11 (1998)

வேலூர் மாவட்ட மற்றும் வேலூர் நகர அவைத் தலைவராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர், வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார் வேலூர் நகர்மன்றத் தலைவராக ஒரு முறையும் நகராட்சி உறுப்பினராக 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.

வேலூர் மாவட்ட நூலகத் தலைவர், மாவட்ட கூட்டுறவு சங்கம், வேலூர் கூட்டுறவு அச்சகத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா கைதியாக ஓராண்டு சிறை வாசகத்தை அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மாயவரம் கிட்டப்பா

நவம்பர் 11 (1983)

பழம்பெரும் சுயமரியாதை இயக்க வீரராகவும் – மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் நீண்டநாள் நண்பர். தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக மயிலாடுதுறை வட்டாரத்தில் கழகத்தை வளர்த்தவர்.

"நிரந்தரப் பிரிவு" என்னும் முள்ளால் நீ என்னைக் குத்தியதுதான் ஈட்டி முனையைவிடக் கூராக என் இதயத்தைக் கிழித்து விட்டது வலி தாங்க முடியவில்லையடா என் வாஞ்சைமிகு தம்பி" என தலைவர் கலைஞர் எழுதிய இரங்கற்பாவின் ஒரு பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.